## உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் - 2017

---

உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உள்ளுர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07**

(i) நியமத்தின் 33 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்திலிருந்து செலுத்தப்பட்ட வட்டி மற்றும் நிறுவனத்தால் பெறப்பட்ட வட்டி என்பன நிதி நிறுவனங்களால் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது செயற்பாட்டு நடவடிக்கைகளாக கருதப்பட வேண்டிய போதிலும் அதனுடன் இணங்காமல் ரூபா 138,318,476 திறைசேரி வட்டி செயற்பாட்டுச் செலவினத்திலிருந்து கழிக்கப்பட்டு செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் கணிப்பீட்டின் போது நிதி நடவடிக்கைகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய உள்ளபடியான காசுப்பாய்ச்சலானது காசுப்பாய்ச்சல் கூற்றின் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 106,174,066 தொகையானதுடன் இது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 110,069,432 ஆக காட்டப்பட்டிருந்ததால் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 3,895,366 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

நியமத்தின் 55 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்தொன்றின் பெறுமாத்தேய்வானது அச்சொத்தானது பயன்பாட்டிற்காக கிடைக்கக்கூடியதாகவுள்ள போது ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், நியமத்துடன் இணங்காமல் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படுகின்ற ஆண்டில் பெறுமானத்தேய்விடப்படுவதில்லை என்ற கணக்கீட்டு கொள்கையொன்று இனங்காணப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன் தவணைப்பணம் மற்றும் வட்டி செலுத்தாத கடன்பட்டோர் மீதிகளை செயற்பாடற்ற கடன்களாக இனங்காண்பதற்கான கணக்கீட்டுக் கொள்கையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வரிசை அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து அரசாங்க மானியங்களாக நிறுவனத்தால் பெறப்பட்ட ரூபா 11,449,133 பெறுமதியான சொத்துக்கள் தொடர்பாக ரூபா 136,576 தொகை மீளாய்வாண்டின் போது காலக்கழிவாக பதிவளிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய காலக்கழிவிற்காக பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்**

மீளாய்வாண்டு தொடர்பாக முன்னைய ஆண்டில் பெறப்பட்ட ரூபா 411,119 தொகையான கடன் வட்டி மீளாய்வாண்டின் வட்டி வருமானமாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்காததால் ஆண்டின் மிகை அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

**2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

2017 திசெம்பர் 31 உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,312,648,250 தொகை கடன்கள் மற்றும் பெறவேண்டிய விடயங்களாக காட்டப்பட்டிருந்த போதிலும் அதனுடன் தொடர்புடைய பட்டியல்களின் பிரகாரம் அம் மீதி ரூபா 3,858,787,730 கூட்டுத்தொகையாகும். அதற்கிணங்க ரூபா 453,860,520 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்<br>(i) 454 மற்றும் 753 (3)(அ)(1) | நிறுவனத்திலுள்ள உத்தியோகத்தர்களின் பயன்பாட்டிற்காக பொருட்களை வழங்கும் போது அவை வழங்கல் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்ட பின்னர் வழங்கப்பட வேண்டிய போதிலும் பொருட்கள் வழங்கப்படுவதாக பொருளிருப்பு பதிவேட்டில் பதிவுகளை மேற்கொண்ட பின்னர் பொருட்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ii) நிதிப்பிரமாணம் 754 | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொருளிருப்பு பதிவேடு ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் சமப்படுத்தப்பட்டு முன்கொண்டுவரப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருந்த போதிலும் ஒவ்வொரு சொத்துக்களிற்கும் உரிய சொத்தின் வகை, கொள்வனவுத் திகதி, பயன்தரு ஆயுட்காலம், நிறம், வகை போன்ற தகவல்கள் அவற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகள் மற்றும் கணனி உபபாகங்கள் தொடர்பில் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2015 திசெம்பர் 25 ஆம் திகதிய பொ்டி 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி | குழுப் போக்குவரத்து வசதிகளிற்கு உரித்துள்ள இரண்டு பிரதிப் பணிப்பாளர்களிற்கு 2017 நவம்பர் மாதத்திலிருந்து மாதமொன்றிற்கு ரூபா 17,500 படி ரூபா 70,000 கூட்டுமொத்தமான போக்குவரத்துப் படி சுற்றறிக்கைகளிற்கு இணங்காமல் செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போதான நிதியத்தின் செயற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னயை ஆண்டின் ரூபா 2,826,072 மிகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 16,083,651 ஆன மிகையொன்றினை விளைத்திருந்தமையினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் மிகை ரூபா 13,257,579 ஆன முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது மானியங்களின் காலக்கழிவு ரூபா 201,859,892 ஆல் அதிகரித்திருந்த போதிலும் வட்டி வருமானம் ரூபா 38,781,024 ஆல் அதிகரித்தமை மற்றும் கடன் நட்டக்கழிவாக பதிவளிக்கப்பட்ட செலவினம் ரூபா 107,601,454 ஆல் குறைவடைந்தமை என்பன நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட மேற்படி முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்களினை பகுப்பாய்வு செய்த போது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது நிதி விளைவுகளில் பற்றாக்குறை காணப்பட்ட போதிலும் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை மிகை ஏற்பட்டிருந்ததுடன் இது ரூபா 4,226,504 இலிருந்து ரூபா 16,083,651 வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளிற்கு ஊழியர் ஊதியம், அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கம் செய்த போது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 88,492,034 மற்றும் ரூபா 18,499,306 ஆன எதிர்மறைப் பங்களிப்பு காணப்பட்ட போதிலும் 2015 ஆம் ஆண்டிலிருந்து அது நேர்மறைப் பெறுமதிக்கு மாறியிருந்தது. எவ்வாறாயினும் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 53,215,095 ஆக இருந்த அப் பங்களிப்பு 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 173,248,771 வரை அதிகரித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அது ரூபா 79,223,754 வரை குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

நிதியம் செயல்நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரித்திருந்த போதிலும் 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய வருடாந்த பாதீடு, முன்மொழியப்பட்ட முதலீடுகள், வருடாந்த பெறுகைத் திட்டம் மற்றும் மனித வள அபிவிருத்தி திட்டம், கடன் மீள்கொடுப்பனவு/ அறவீட்டுத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

உள்ளூராட்சி சபைகளை வலுப்படுத்துவதற்காக அந்த நிறுவகங்களின் நிலையான சொத்துக்களினை அபிவிருத்தி செய்தவற்கு உள்ளூராட்சி அரசாங்க உட்கட்டமைப்பு முன்னேற்ற செயற்திட்டம் (LGIIP), நகர அபிவிருத்தி குறைந்த வருமான வீடமைப்பு செயற்திட்டம் (UDLIHP) மற்றும் வற்றாத பயிர்கள் அபிவிருத்தி செயற்திட்டம் (PCDP) என்பவற்றால் உள்ளூராட்சி சபைகளிற்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கு நிதியத்தினால் வழங்கப்பட்ட கடன்களிலிருந்து அறவிடப்பட்ட வட்டி என்பவற்றில், திறைசேரிக்கு அறவிடப்பட்ட வட்டியின் பகுதியொன்று மற்றும் கடன்களின் மூலதனத் தொகைக் கொடுப்பனவின் பின்னர் காணப்படும் மீதியை நிதியத்தின் வருமானம் உள்ளடக்கியிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியளவில் ஒரு வருட காலப்பகுதியொன்றுக்கு மேலாக செயற்பாடற்ற கடன் பட்டியலில் காணப்பட்ட ரூபா 542,623,411 பெறுமதியுடைய 17 கடன் மீதிகளில் ரூபா 235,912,902 பெறுமதியுடைய 09 கடன் மீதிகள் மாத்திரம் 2017 ஆம் ஆண்டின் போது மீள்பட்டியலிடப்பட்டிருந்த (rescheduled) அதேவேளை ரூபா 306,710,509 மீதியை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1993 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி (திருத்த) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 1916 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம், பதவியணியினரை நியமனம் செய்வதற்கான அதிகாரங்களை ஆணையாளர் சபை கொண்டிருக்க வேண்டிய போதிலும் ஆணையாளர் சபையின் அங்கீகாரமில்லாமல் உரிய அமைச்சின முன்னாள் செயலாளர் பணிப்பாளர் பதவியில் பதிற்கடமை புரிவதற்கு/ கடமைகளை ஆற்றுவதற்காக கணக்கீட்டு சேவையிலுள்ள உத்தியோகத்தர் ஒருவரை நியமனம் செய்திருந்தார். மேலும், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது மேற்குறித்த உத்தியோகத்தரிற்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12:5:4 மற்றும் 12:8 ஆம் பிரிவுகளுக்கு முரணாக ரூபா 382,056 பதிற்கடமைச் சம்பளமாகவும் 2008 யூலை 28 ஆந் திகதிய பிஈடி/50 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி மற்றும் 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.7 ஆம் பந்தி என்பவற்றிற்கு முரணாக ரூபா 522,000 போக்குவரத்துப் படி மற்றும் ரூபா 340,849 எரிபொருள் படி என்பனவாகவும் ரூபா 1,244,905 கூட்டுத்மொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி சபைகளுக்கு கடன்களினை வழங்குதல் மற்றும் அத்தகைய கடன்களினை அறவிடுதல் என்பன நிதியத்தின் செயற்பாடுகளாகக் காணப்பட்ட போதிலும் அந்த கடன்களை அறவிடும் போது வட்டி மற்றும் மூலதனத்தினை தனித்தனியாக இனங்காண்பதற்கு முறையான கணக்கீட்டு நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நிலுவையாகவுள்ள கடன் தவணைப்பணம் மற்றும் வட்டி தொடர்பான வயதுப் பகுப்பாய்வொன்றை நிதியம் தயாரித்திருக்கவில்லை.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 நவம்பர் 26 ஆம் திகதிய 16/1975/744/018 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2016 நவம்பர் 09 இலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்காக பணிப்பாளர் பதவிக்கு உத்தியோகத்தரொருவர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தார். குறிப்பிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் iii ஆம் பரிந்துரையின் பிரகாரம் ஒரு வருட காலப்பகுதியின் பின்னர் மேற்படி பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தகைமைகளை திருப்தியாக கொண்டுள்ள உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கையை எடுப்பதற்கு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சுச் செயலாளரிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாமல் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட தகைமைகளை திருப்தியாக கொண்டிராத உத்தியோகத்தரின் சேவை ஒரு ஆண்டால் மேலும் நீடிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதியத்தின் 34 மொத்தப் பதவியணியினரில் 06 உத்தியோகத்தர்களிற்கு பணிப்பொறுப்பு கையளித்தல் கடிதம் வழங்கப்பட்டிருக்கவில்லை. வழங்கப்பட்ட பணிப்பொறுப்பு கையளித்தல் கடிதத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட்ட கடமைகளில் குறைபாடுகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் பணிப்பொறுப்புக்களை ஒதுக்குதல் மற்றும் பிரிவுகளிற்கு உத்தியோகத்தர்களை முறையாக இணைப்புச் செய்தல் என்பன மீண்டும் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

### 4.4 ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட நிதியத்தின் வளங்கள்

உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு சாரதியொருவர் மாத்திரமே இணைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளரின் 2016 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் அச் சாரதி 2016 செப்தெம்பர் 06 இலிருந்து விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் தனிப்பட்ட பதவியணியினருக்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் மேற்படி சாரதியின் சம்பளத்திற்காக ரூபா 322,165 தொகையை இந் நிதியம் செலுத்தியிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுச் செயலாளரினால் வழங்கப்பட்ட 2017 ஆகஸ்ட் 14 இன் என்பி/எஸ்பி/எஸ்டிஜீ/17 ஆம் இலக்க கடிதம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சிநிரல்’’ என்பவற்றின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவகமும் முறையாக செயற்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு தொடர்பாக நிதியத்தால் அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற தொழிற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட

வேண்டுமென அறிந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நிதியத்தின் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அவ் இலக்குகளை அடைந்து கொள்வது தொடர்பான இலக்கு கட்டங்கள் மற்றும் அத்தகைய இலக்குகளை அடைந்துகொள்வதை மதிப்பீடு செய்வதற்கான சுட்டிகள் என்பவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

நிதியத்திற்கு உள்ளகக் கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்பட்டிருக்காததுடன் வரிசை அமைச்சினால் போதுமான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் நிதியத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கடன் அறவீடு மீதான கட்டுப்பாடு | நிறுவனத்திற்கு கிடைக்கவேண்டிய கடன் தவணைப்பணம் மற்றும் வட்டியினை அறவிடுவதற்காக போதுமான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கணக்கீடு | 2012 ஆம் ஆண்டில் நிதியத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு நிறுவப்பட்ட கணனி முறைமையினை பயன்படுத்தி கணக்கீட்டு மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |